**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 07.11.2025

அசல் வழக்கு எண். 64/2016

வா.சா. 1. – கார்த்திக், த/பெ. பெருமாள் ரெட்டியார்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு எதற்காக தாக்கல் செய்தீர்கள் என்றால் அசல் வழக்கில் வழங்கப்பட்ட சமாதான தீர்ப்பு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அது மட்டுமல்லாமல் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி உள்ளீர்கள் என்றால் சரிதான். யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் தெரியுமா என்றால் தெரியும். யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் எங்கள் அத்தை ஆறு பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். உறுத்து கட்டளை பரிகாரம் நீங்கள் 12வது பிரதிவாதி கிரிஜா என்பவருக்கு எதிராக மட்டும் கேட்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் என்ன படித்து உள்ளீர்கள் என்றால் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் படித்துள்ளேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன் பால் டிஸ்ட்ரிபியூஷன் திருமலா பால் ராணிப்பேட்டை மாவட்டத்தில் செய்து வருகிறேன். அது இல்லாமல் பெட்ரோல் பங்க் இருக்கிறது. மேற்படி வியாபாரங்கள் உங்களுடைய சித்தப்பா, அத்தை ஆகியோர் சேர்ந்து செய்கிறீர்கள் என்றால் இல்லை. இந்த வழக்கில் எட்டாவது பிரதிவாதி பெருமாள் ரெட்டியார் உங்களது தகப்பனார் என்றால் சரிதான். நடேசன் ரெட்டியாரின் ஒரே மகன் சம்பந்த ரெட்டியார் 1995 இல் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவருடைய மற்றொரு மகன் சுப்பிரமணி எப்பொழுது இருந்து விட்டார் என்றால் 1949 என்று

நினைக்கிறேன். ஒன்று முதல் ஆறு வரையிலான பிரதிவாதிகள் யாருடைய மகள்கள் என்றால் சம்பந்த ரெட்டியாரின் மகள்கள் ஆவார்கள். ஏழு, எட்டு பிரதிவாதிகள் முறையே ஏகாம்பர ரெட்டியார், பெருமாள் ரெட்டியார் ஆகியோர் சம்பந்த ரெட்டியாரின் மகன்கள் ஆவார். நீங்கள் வழக்கில் எத்தனை ஐட்டம் சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் நான்கு ஐட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் ஐந்து ஐட்டம் உள்ளது என்றால் சரிதான். ஐந்து ஐட்டம் சொத்துக்களும் கூட்டுக்குடும்ப சொத்து என்றால் சரிதான். தற்பொழுது உங்களுக்கு என்ன வயதாகிறது என்றால் 36 ஆகிறது. எந்த ஆண்டு நீங்கள் பிறந்தீர்கள் என்றால் நான் கடந்த 1989 ஆம் ஆண்டு பிறந்தேன். அசல் வழக்கு எண் 114/2003 என்கிற வழக்கு உங்கள் அத்தை உங்கள் அப்பாவிற்கு எதிராக தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு போலியானது என்று நீங்கள் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். போலியான தீர்ப்பானை அதாவது சமரச உடன்படிக்கை செல்லாது என்று நீங்கள் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பானை சமரசத்தின் வாயிலாக மோசடியாக பெறப்பட்டது என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்து இந்த நீதிமன்ற வரம்பிற்குள் வராது என்று சொன்னீர்கள் என்றால் சரிதான். போலியான எல்லை வரையறைகளை உருவாக்கி உள்ளதால் அது செல்லத்தக்கது அல்ல என்று சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு தாக்கல் செய்யும்பொழுது உங்களுக்கு என்ன வயது என்றால் 14 வயது ஆகும். சமாதான தீர்ப்பு எப்பொழுது வழங்கப்பட்டது என்றால் 2013ஆம் ஆண்டு வழங்கப்பட்டது அப்பொழுது உங்களுக்கு என்ன வயது என்றால் 24 வயது ஆகும். சமாதான டிகிரி 2006 ஆம்

ஆண்டு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியில்லை. நீங்கள் அவ்வாறு பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் அந்த ஆவணத்தை தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் தாக்கல் செய்துள்ளேன். உங்களிடம் காட்டப்படுவது மேற்படி முதல் நிலை தீர்ப்பாணை என்றால் சரிதான். **அந்த முதல் நிலை தீர்ப்பாணை ஆவணம் பி.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சமாதான தீர்ப்புக்கு எதிராக உங்கள் தந்தை மேல்முறையீடு செய்தார்களா என்றால் மேல்முறையீடு செய்யவில்லை. மேற்படி வழக்கில் உங்கள் தந்தையார் இரண்டாவது பிரதிவாதி அவர் பதில் தாக்கல் செய்தாரா என்றால் அவருக்கு வக்கீல் இருந்தார்கள். மேற்படி தீர்ப்பானை பிறப்பிக்கப்பட்ட பிறகு 10 ஆண்டுகள் கழித்து தான் இந்த வழக்கு நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பொழுது எனக்கு தெரியாது இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பொழுது தான் தெரியும். மேற்படி வழக்கில் நான்காவது ஐட்டம் சொத்தாக இருந்த சொத்தினை நீங்கள் இந்த வழக்கில் அரசாங்க சொத்து என்று சொல்லி வழக்கு நடத்துகிறீர்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்து அரசாங்க சொத்துதான் என்று காட்டுவதற்கு உங்கள் தரப்பில் நீங்கள் ஏதேனும் ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் செய்துள்ளேன். நீங்கள் பன்னிரண்டாவது பிரதிவாதிக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை வேண்டுமென்று ஒரு மனு தாக்கல் செய்திருந்தீர்கள் என்றால் சரிதான். எதற்காக அந்த இடைக்கால மனு தாக்கல் செய்தீர்கள் என்றால் கடந்த 2007 ஆம் ஆண்டு மணிகண்ட ரெட்டியார் என்பவர் இறந்து விட்டார். அவர் இல்லாத பொழுது 2013 ஆம் ஆண்டு இறுதிநிலை தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. அரசாங்க சொத்து அரக்கோணம் நீதிமன்ற எல்லைக்குள் வருகிறது அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அந்த வழக்கினை காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்தது தவறு ஆகும். நீங்கள் கூறுவது தவறு அதிகார நீதிவரம்பு நீதிமன்றத்திற்கு தெரிந்து தான் அந்த வழக்கு எடுத்து நடத்தப்பட்டது நீதிமன்றம் அதை நடத்தியது என்றால் அதை நீதிமன்றம் நடத்தவில்லை வழக்கறிஞர்கள் பொய்யாக சமாதான உடன்படிக்கை ஜோடித்து நீதிமன்றத்தை ஏமாற்றி தீர்ப்பு வழங்கினார்கள். மாவட்ட நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்த இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்டது தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் எண் தெரியுமா என்றால் தெரியும் அது சி.எம்.ஏ.10/2017 ஆகும். அது எப்பொழுது தள்ளுபடி ஆனது என்கிற விவரம் தெரியுமா என்றால் ஆறு மாதங்களுக்கு முன்பு தள்ளுபடி ஆகிவிட்டது. நீங்கள் தான் அந்த மேல்முறையீடு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டில் உங்கள் தகப்பனார் எதிர்வாதியாக இருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான்காவது ஐட்ட சொத்து அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்து இல்லை என்று கூறி அது கூட்டுக் குடும்ப சொத்து தான் என்று குறிப்பிட்டு உங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி இல்லை. ஒன்று முதல் நான்கு வரையிலான ஐட்ட சொத்துக்கள் எந்த ஊரில் இருக்கிறது என்றால்அரக்கோணம் நெமிலி, அசநெல்லிகுப்பம் என்கிற ஊரில் இருக்கிறது ஒரு சொத்து மட்டும் காஞ்சிபுரத்தில் இருக்கிறது. 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் ஆறாம் பிரதிவாதிகள் சேர்ந்து தனக்கு பாகம் தேவையில்லை என்று எழுதிக்கொடுத்துள்ளதாக உங்களுடைய முதல் விசாரணையில் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரியில்லை. விடுதலை பத்திரம் மற்ற சொத்துக்களுக்கு எழுதி வாங்கவில்லை என்று நீங்கள் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். 7 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் அவர்களுடன் ஒத்துழைக்கவில்லை என்று நீங்கள் கூறுகிறீர்கள் என்றால் சரிதான். அவ்வாறு டிகிரி வாங்கியது தவறு என்று

நீங்கள் பிரமாண வாக்குமூலத்தில் சொல்வது தவறு என்றால் சரியில்லை. அசல் வழக்கு எண் 114/2003 என்கிற வழக்கு சமரசமாக தீர்ந்து விட்டது அதை எதிர்த்து உங்கள் தகப்பனார் மேல்முறையீடு செய்யவில்லை. அதேபோல் நீங்களும் அந்த வழக்கினை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை மேற்படி சூழ்நிலையில் இந்த வழக்கு நீங்கள் தாக்கல் செய்தது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. அந்த வழக்கில் வேறு ஒரு சொத்தினை போட்டுவிட்டு இந்த வழக்கில் வேறு ஒரு சொத்து விவரத்தை கொடுத்து விட்டு இந்த வழக்கில் அந்த வழக்கின் உடைய சமரச தீர்ப்பினை செல்லாது என்று கோர முடியாது என்றால் சரியில்லை. இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதால் பிரதான வழக்கும் உங்களுக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. ஏற்கனவே சார்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பினை மற்றொரு சார்பு நீதிமன்றம் செல்லாது என்று கூற முடியாது என்றால் சரி இல்லை. இந்த வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியில்லை. பத்து ஆண்டுகள் காலதாமதம் ஏற்பட்டதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.